**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No.40 /2024**

**வாக்குமூலம்: பி.வா.சா.1 – தினேஷ்குமார்**

**20.04.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சின்னகலையம்புத்தூர் கிராமம் சர்வே எண்.151/1, 151/2, 156/3 ல் உள்ள நிலங்களையும் வண்டி பாதை பாத்தியங்களையும் வாதி வகையறாவிடம் இருந்து கடந்த 18.7.2007 ல் தாங்கள் கிரையத்திற்கு வாங்கி அதனை வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தார் ரோடுகளும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீட்டடி மனைக்குண்டான வரைபடம் மற்றும் லே அவுட் அப்ரூவல் முறைப்படி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னகலையம்புத்தூர் பஞ்சாயத்தில் கடந்த 13.1.2023 ல் போடப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் தான் தான ஆவணம் பஞ்சாயத்திற்கு பதிந்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தான ஆவணம் பதிவதற்கு முன்பாக கடந்த 15.2.2023 ல் பஞ்சாயத்து மூலம் NOC பழனி நம்பர் 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தான ஆவணத்தில் தானம் கொடுக்கப்பட்ட ரோடுகளின் அமைப்பைக்காட்டக்கூடிய வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா நிலங்களுக்கு சம்பந்தமாக வாதிக்கும் எனக்கும் ஏற்கனவே திண்டுக்கல் கோர்டில் சிவில் வழக்கு நடந்ததில் அதில் வாதிக்கு எதிராக தீர்ப்பு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா வண்டிப்பாதையை பஞ்சாயத்திற்கு தான பத்திரம் பதிந்து கொடுத்ததில் வாதிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி